**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல்வழக்கு எண்.292/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமளா | கணவர் பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 23.02.2026

**P.W. : 1**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், மூவரும் என் உடன் பிறந்தவர்கள். மூவரும் எனக்கு மூத்தவர்கள். என் தந்தை பெயர் கல்யாண சுந்தரம், அவர் தமிழ்நாடு காவல் துறையில் காவலராக இருந்தார். அவர் 1986 இல் இறந்தார். என் தந்தை இறக்கும் போது அவருக்கு சுமார் 75 வயது இருக்கும். 1982 இல் எனக்கு திருமணமானது. 3 ம் பிரதிவாதிக்கு 1966 வாக்கில் திருமணமானது. நான்

திருமணம் ஆகும் வரை என் பெற்றோருடன் தான் வசித்தேன். எனது திருமணத்திற்கு பிறகு தாத்தையங்கார் பேட்டைக்கு என் கணவர் ஊருக்குச் சென்றேன். என் திருமணத்திற்கு பிறகு 1,2 பிரதிவாதிகள் என் தந்தையுடன் ஒன்றாக வசித்தார்கள் என்றால் 1982 வாக்கில் என் தந்தைக்கு பக்கவாதம் வந்துவிட்டது. அதனால் நானும் என் தந்தை வீட்டிற்கே வந்துவிட்டேன். எல்லாரும் ஒன்றாக வசித்தோம். என் தாயார் 2003 அல்லது 2004 வாக்கில் இறந்தார். என் தாயார் இறக்கும் போது அவருக்கு சுமார் 76 வயதிருக்கும். என் தாயார் என் தகப்பனார் இறக்கும் வரை அவருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என் தந்தை இறக்கும்போது என் தாயாருக்கு என்ன வயதிருக்கும் என்றால், எனக்கு தெரியாது. என் தந்தை 1913 வாக்கில் பிறந்ததாக சொல்லி கேள்விப்பட்டுள்ளேன். என் தாயார் என் தந்தையை விட சுமார் 16 வயது இளையவர் என்று அவர் என்னிடம் சொல்லியுள்ளார். நான் வழக்கு தாக்கல் செய்த போது, ஸ்ரீரங்கம், மேலூர் ரோடு, லெட்சுமி நாராயணன் நகரில் உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருந்தோம். அந்த வீட்டில் 2 ஆண்டுகள் குடியிருந்தேன். சாட்சி தாமாக கூறுகிறார் – அந்த காலக்கட்டத்தில் என் அம்மாவின் வீட்டை இடித்து கட்டுவதற்காக எல்லோரும் லெட்சுமி நாராயணன் நகருக்கு வாடகைக்கு போனோம். வழக்குச் சொத்துக்கள் என் தந்தைக்கு எவ்வாறு பாத்தியம் என்றால், என் தந்தை வழி வழியாக வந்ததாக சொல்லியுள்ளார்கள். நான் ஸ்ரீரங்கம் நெடுந்தெருவில் உள்ள வாசன் அப்பார்ட்மெண்டில் குடியிருந்தேனா என்றால் அது தனி வீடாகும். அதில் ஜமான்களை போட்டுவிட்டு அந்த தோப்பில் மாட்டு பண்ணை வைத்து அதிலேயே நானும் என் கணவரும்

குடியிருந்தோம். எனக்கு குடும்ப அட்டை உண்டு. அதில் எந்த வீட்டு முகவரி போடப்பட்டுள்ளது என்றால் ஒவ்வொரு ஆண்டும் எந்த முகவரிக்கு மாறுகிறேனோ அந்த முகவரி போடப்படும். தாவா 2வது அயிட்ட சொத்தில் முதல் தாக்கான கதவு எண்.81 கொண்டது ஒரு வீடு தான். அதற்கு அருகிலேயே மற்றொரு வீடு உள்ளது. கதவு எண்.81 கொண்ட வீட்டில் தற்போது எனது மூத்த அண்ணன் திருவேங்கடம் வசிக்கிறார். கதவு எண்.81 வீட்டை ஒட்டி வடக்கு பக்கம் கதவு எண்80 கொண்ட வீடு உள்ளது. கதவு எண்.80 வீட்டில் தற்சமயம் எனது சின்ன அண்ணனான 2ம் பிரதிவாதி குடிபோய்யுள்ளார். கதவு எண்.80 கொண்ட வீடு என் தகப்பனார் காலத்திலேயே இருந்தது. அந்த வீடு 1856இல் மூதாதையர் வாங்கியதாக என் தந்தை சொல்வார். கதவு எண்.81 கொண்ட வீடு 2013 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அந்த வீட்டை 1ம் பிரதிவாதி கட்டினார். அதற்கான கடனை வங்கியில் என் மகன் வாங்கி கொடுத்தார். அந்த கடன் தில்லை நகர் கே.வி.பி–வங்கியில் வாங்கப்பட்டது. தாவாச் சொத்துக்களுக்கு நான் வில்லங்கச் சான்றிதழ்களை பார்க்கவில்லை. கதவு எண்.81 வீடு கட்ட வாங்கிய கடன் எவ்வளவு என்றால், என் மகனுக்கும் என் மூத்த அண்ணனுக்கும் தான் தெரியும். பாலசுப்ரமணியன், மற்றும் சகுந்தலா யார் என்றால் என் அம்மாவின் தங்கை மற்றும் அவரது கணவர். 2ம் பிரதிவாதிக்கும் மேற்படி நபர்களுக்கும் என்ன சம்மந்தம் என்றால் 2ம் பிரதிவாதியை குழந்தை இல்லாததால் என் சித்தி, சித்தப்பாவான மேற்படி நபர்கள் தத்து எடுத்துக் கொண்டார்கள். மேலும் சித்தப்பாவின் இரயில்வே வேலையை 2ம் பிரதிவாதிக்கு கொடுத்தார்கள். 1ம் பிரதிவாதிக்கு என்ன வேலை என்றால் அறநிலையத்துறையில் செயல்

அலுவலராக இருந்தார். பால்பண்ணையை யார் நடத்தினார்கள் என்றால் என் மகன் நடத்தினார். 1ம் பிரதிவாதி அதை மேற்பார்வை செய்தார். நான் அதில் முதலீடு செய்து பார்த்துக் கொண்டேன். அந்த பால்பண்ணை 1வது அயிட்ட சொத்தான தோப்பில் நடந்தது. மேற்படி பால்பண்ணை 2007 அல்லது 2008 காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பால்பண்ணை ஆரம்பிக்க என் மகன் கடன் வாங்கினாரா என்றால் என் மகனின் பணமும் இருந்தது, கே.வி.பி–வங்கியில் கடனும் வாங்கினார். அந்த கடன் வாங்குவதற்கு முன்பே அந்த சொத்து கே.வி.பி வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. அது தான் முதல் கடன். அந்த கடனை என் மகனும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் வாங்கினார்கள். அது எவ்வளவு கடன் என்றால் என் மகனுக்கு தான் தெரியும். அந்த கடனை யார் அடைத்தார்கள் என்றால் என் மகன் தான் அடைத்தார். என் மகனை தேவைப்பட்டால் சாட்சியாக விசாரிப்பேன். கே.வி.பி கடன் பற்றிய விவரங்கள் அனைத்தும் என் மகனுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தான் தெரியும்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.